1970 மார்ச் 16]

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to the text-books for the students of linguistic minorities, may I know what arrangements have been made in that direction?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய குறிப்பு இல்லை. ஒருசில பள்ளிகளில் அதை தேசியமயமாக்கி நாம் புத்தகங்கள் வெளியிடுகிற நிலை வருமா என்று தெரியவில்லை. ஆனால் ஆந்திராவிலிருந்து வெளியிடப் படுகிற அந்தப் புத்தகங்களை இங்கு நடைமுறைப்படுத்துவதன் மூலம் அந்தச் செயலை எளிதாக ஆக்கலாம். அதுபற்றிய தன்மைகளை ஆராய வேண்டும்.

பள்ளித் துணை இன்ஸ்பெக்டர்கள் அலுவலகங்கள்

*** 390 வினா—திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பத்திலிருக்க வேண்டிய பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகத்தை கடலூரிலிருந்து நெல்லிக்குப்பத்திற்கு மாற்ற அரசாங்க உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த விஷயம் அரசாங்க பரிசீலனையிலிருக்கிறது.

*** 391வினா—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள பொன்னமராவதியில் பள்ளித்துணை ஆய்வர் (Deputy Inspector) அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : பொன்னமராவதிப் பகுதியில் ஏறக்குறைய 87 தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகள் இருப்பதனால் அங்கு ஒரு பள்ளிக்கூட துணை ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித்தான் இப்போது இல்லை என்று விடையிறுத்தேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தையும் ஒவ்வொரு ரேஞ்சாக அமைத்து அதற்கு ஒரு டெப்டி இன்ஸ்பெக்டர் நியமிக்க வேண்டுமென்ற கருத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது. 344 துணை ஆய்வாளர்கள் இருந்து வருகிறார்கள். 374 ஒன்றியங்கள் இருந்து வருகின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு துணை ஆய்வாளர் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டு அரசு அதை நடைமுறைப்படுத்துகிற நிலை இருந்து வருகிறது. திருமயம் ஒன்றியத்தில் 68-ம் அறிமளத்தில் 62 பள்ளிகளும் இருக்கின்றன. இதில் ஒரு ஜுனியர் டெப்டி இன்ஸ்பெக்டர் இருந்து வருகிறார். பொன்னமராவதி ஒன்றியத்தில் ஒரு துணை ஆய்வாளரை ஏற்படுத்த வேண்டுமென்ற குறிப்பு இயக்குனரிடம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. திருப்பற்றுக்

குறை காரணமாக இந்த ஆண்டு 'டெஃபர்' செய்யப்பட்டிருக்கிறது. 1970-71-ல் வருவதற்கில்லை. ஆனால் திட்டம் இருக்கிறது. பிறகு முறைப்படி மேற்கொள்ளப்படும்.

திரு. வை. சுவாமிநாதன் : வருங்காலத்தில் பஞ்சாயத்து யூனியன் விஸ்தரிப்பு அதிகாரியையே டெப்டி இன்ஸ்பெக்டராக நியமிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய குறிப்பு இல்லை. ஆனால் டெப்டி இன்ஸ்பெக்டராக நியமிக்கப்படுவதற்கான தகுதி இருக்குமானால் அப்படிப்பட்டவர்களை நியமிப்பதில் ஆட்சேபணை இருக்க முடியாது.

மாணவர்களுக்கென இரகசியப் பதிவேடுகள்

* 393 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களுக்கென இரகசியப் பதிவேடுகள் வைத்து வருவது குறித்து கல்வி நிறுவனங்களுக்கு இம் மாநில அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, if it is not possible to maintain confidential records of students, will the Government think of reviving the system that was in vogue which has now been given up, *viz.*, of sending progress reports of students to parents, so that it may give an idea to the parents about the progress, the backwardness or forwardness of the students' career inside the school?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ப்ராக்ரஸ் ரிப்போர்ட் என்பது பல பள்ளிக்கூடங்களில் இருந்து வருகிறது. தனியார் பள்ளிகள், கல்வி நிலையங்களில் எல்லாம் அது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கப் பள்ளிகளில் இருக்கிறதா இல்லையா என்பதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும். அதற்கான முயற்சிகளில் கூட எதிர்காலத்தில் ஈடுபடலாம்.

THIRU T. MARTIN : Sir, sometime back we were given to understand by the Hon. Minister for Education that the performance of the students in the examinations conducted in schools will be taken into consideration along with the performance in the public examination. So, may I request him to state whether such a scheme is under contemplation and if so, when it will be given effect to?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஒரு கருத்து இருந்து வருகிறது. அதைப்பற்றிக் கூட நான் வெளியிட்டேன். பள்ளியாண்டின் இறுதித் தேர்வு நடத்தப்படும்பொழுது, மனப்பாடம் செய்து